Registered, at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி

பத்திரவிலைவிதம்
வருஷ ரூபா உ-00
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫௦
இந்தியாவுக்குசதம் ௫௦
பிறதேசங்களுக்கு ௭௫

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிதம்
வரி ஒன்றுக்குச்சதம் ௧௦
௧௦ க்குமேல்ஒருவரிக்கு ௮
௨௦ க்குமேல்...........அ
இணைப்பிரசுர மொவ்வொ
ன்றிற்கும்3-ல் ஒன்று

சாதுசங்கஞ் சன்மார்க்கசாதனம்

ஒன்றுவிட்டொரு புதன்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்.

Published on every
other Wednesday

VOL. XXXIV. JAFFNA MARCH 20th 1918. No. 6

௩௪ம் புத்தகம். யாழ்ப்பாணம் ௧௯௧௮ம் ௵ பங்குனி௴ ௨௦௳ புதன்கிழமை. சங்கியை ௬

LIBRARY
2 -10- 1995
UNIVERSITY OF JAFF

பிழை திருத்தம்.

சென்றபத்திரிகையில் சிலேத்துமசீரிழிவு நான்குஎன்றதை வாதசீரிழிவு நான்கு எனக்கொள்க.

சுந்தரன் செய்த தந்திரம்.

(4ம் இலக்கப் பத்திரத் தொடர்ச்சி)

சுந்தரன் தன்மகனைநோக்கி அப்பா நீயுன் தந்தையை இப்போதுகண்டால் என்ன செய்வாய் என்றான்.

அதற்கு மகன் மாறுத்தரமாக அப்படிக் கேட்கலாமா? கண்டால் அளவற்ற சந்தோஷமுண்டாகுமென்றது உமக்குத் தெரியாதோ என்றான்.

சுந்தரன் உன் தந்தையைக்காட்டினால் அவர் அகப்பட்டுக்கொண்டால் என்னசெய்வாய் என்றான்.

அதற்கு மகன் உத்தரமாக அப்படிநேரிடுவதிலும் அவரைக் காணுமலிருப்பதே நல்லதென்றான்.

அதற்குச் சுந்தரன் உத்தரமாக அப்படியா? என்னவிலங்கம் நேரிடினும் உன் தகப்பனை உனக்குக்காட்டல் எனதவிருப்பம். உன்தந்தையும் உன்னைகாண அதிகவிருப்பம். ஆனல் "ஒருவர்அறிந்தது இரகசியம், இருவரறிந்தது பரகசியம்" என்பர். உனபாட்டி உன்மட்டிலும் உன்தந்தைமட்டிலும் மிகு அன்புள்ளவளானுலும் "பெண்புத்திபின்புத்தி" ஆதலால் காரியத்தை வெளியிட்டுவிடுவாளென்று பயந்து உன்னைத் தனியே அழைத்துவந்தேன். நீ நான்சொல்லும் இரகசியத்தைக் காப்பாற்றுவாயா? அதற்கு உறுதிகூறுகிறுயா என்றான்.

அதற்கு மகன் உத்தரமாக, எனது தேசத் தந்தையின் காரியமாதலால் என்னகஷ்டம்நேரிடினும் அதைக் காப்பாற்றுவேன் என்பதைக் கேட்கவும்வேண்டுமா என்றான்.

அதற்குச் சுந்தரன் உத்தரமாக, தம்பி உனக்கு ஒரு பிரமிப்பை உண்டுபண்ணப் போகிறேன். இரகசியத்தை வெளியிடுகிறேன். உன்னைக் காணவேணுமென்னும் பேராசையால் என்னுயிரையும் வெறுத்து வந்தேன். நான் ஒரு ஸ்லாமியனல்ல. நானே உன்பிதா சுந்தரன் என்றான்.

அதைக்கேட்ட மகன் சற்றுநேரம் திகைத்துநின்றுவிட்டு உணர்ச்சிவந்து தந்தையைத் தாவிப்பிடித்து ஆனந்தகண்ணீர் சொரிந்தான். சுந்தரனும் மகனைக் கட்டிப்பிடித்து விம்மிவிம்மியழுதான். பின்னர் நாம் வெகுநேரம் தாமதிக்கலாகாது, இனி நடக்கவேண்டிய கருமங்களை யோசித்துக்கொண்டு நான் செல்லவேண்டும். நான் இப்போ சோனகவேடம்பூண்டு மட்டுக்களப்பிலிருக்கிறேன். மகனே! நான்கொண்டுவந்த பணத்தைக் காப்பாற்றுவாயா? வீட்டைச் சோதித்தால் எல்லாம் போய்விடும். அதோடும் என்னிருப்பிடமுமறிய அது வழியாகும். ஆதலால் வீட்டுள் வைக்கப்படாதென்றான். பின்பு மகன் உமது யோசனை எதுவோ அதின்படிநடக்கச் சித்தமாயிருக்கிறேன் என்றான். சுந்தரனே ஓர் செம்பையும் பணத்தையுங் கொண்டுவா என்று எடுப்பித்து அதில கொண்டுவந்த தொகையிற் பெரும்பாகத்தைக் கொட்டி வேறோர் உலோமூடி எடுப்பித்து அதால்மூடி மண்வெட்டியை எடுப்பித்துக் கிணற்றுக்குச் சற்றுத்தூரத்தில் ஓரிடத்தில ஓர் குழிவெட்டுவித்து அதில் அதைத்தாழ்த்து மூடிவிட்டு அதற்குத் தண்ணீர்வார்த்துப் பாத்திபோலச்செய்து அதில் ஓர் புளியங்கன்றைப் புரட்டிநடுவித்து இதைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள், இது பட்டாலுங் காரியமில்லை. பாட்டி கேட்டால் புளியங்கன்றைப் புரட்டிவைத்தேனென்றுசொல். ஆட்கள்நிற்கும்போது அதைத் திரும்பிப் பாராதே! இதை அவசியங்கண்டாலன்றித் தொடாதே! ஆனல் இம் மீதிப்பணத்தை உன்னிடம்விடல் சிறப்பல்ல. ஐம்பது இறைசாலைக்கொண்டுபோய் ஒரு சீலையில்முடிந்து ஓரிடத்திற் சொருகிவைத்துத் தேவைக்கு எடுத்துக்கொள். மிகுதிக்காசை நான் பட்டினத்தில் தம்பிமரைக்காயரிடங் கொடுக்கிறேன், அங்கு நாளைக்குவந்து மட்டுக்களப்புச் சுல்தான் முகமதுமரைக்காயரைக் காணவந்தேனென்றுசொல்லி என்னைச்சந்தி. அவர்வீடு சின்னப் பள்ளிவாசலுக்கு அருகிலாம். அவருக்கு உன்னைச் சங்கானைச்சந்தையிற் கண்டதாயும் தகப்பனற்றபிள்ளையென்றுஞ்சொல்லி ஒருவியாபாரஞ்செய்ய உதவிசெய்யும்படி பொருத்தியிருக்கிறேன். இந்தா இன்னும் நாறுஇறைசால். இதையும் அங்குகொண்டுவா என்றுசொல்லி மிகுதிப்பணத்தையுங்கொண்டு போய்விட்டான் (வரும்)

கையொப்ப வரவு.

ம ா ா ஸ்ரீ இ. ஆசைப்பிள்ளை வைத்தியர் சில்லாலை.	2—00
S. ThambiRajah Esq. Overseer P. W. D. Balongoda.	2_50
Joseph Machado Esq. Jaffna.	2_50
C. B Ninamarikar Esq. Colombo.	5_00
S. M. Rajaiah Esq. Store Kecper தொண்டமானுறு	2—50
E. Muttusamy Vethan புத்தூர்	4—00
S. Ramasamy Esq. மலாய்.	2—75
N. Johnpillai Esq. காரந்தனை.	3—00
Mr. Joel Paul தெல்லிப்பழை.	5.-00

காலயுத்திவர்ஷ வாக்கியபஞ்சாங்கம்.

இது யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் கணிக்கப்பட்டு ஸ்ரீ ச. சோமசுந்தர ஐயரவர்களால் தங்கள் கலாநிதி யந்திரசாலையிற பதிப்பிக்கப்பட்டது. இது வழக்கம்போல எல்லாவிஷயங்களுமமைந்துள்ள சுத்தமான பதிப்பு. தற்காலம் மற்றைய பஞ்சாங்கங்கள் விலையேற்றமாக்கயிருக்கவும இவர்கள் முன்போலவே 25 சதமாயே விற்பனவுசெய்துவருகின்றனர். அனுப்பிய பிரதிக்காக மனமுவந்த வந்தனங் கூறுகிறோம்.

யாழ்ப்பாணம்.

வர்ச்சி—வெயிலகோரம் பங்குனிமாசத்தை நினைப்பூட்டுகிறது. கடிமன காய்ச்சலாதிபரோகங்கள் ஆங்காங்குண்டு. பணப்புளக்கங்குறைவு. பொருட்களெல்லாம் விலையேற்றம். மிளகாய் ஒருறுத்தல் 40 சதத்துக்குமேலாய் விற்கிறது.

கிராமச்சங்க வரிப்பணம்— தலைவரிப்பணமிறுப்போர் கிராமச்சங்க பரிபாலனத்திற்காகவும் சதம் 25 உயர்த்துமபடி தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படுகிறது. ஆதலால் காட்டுப்பகுதியார் 1 ரூபா 75 சதம்தலைவரி இறுக்கவேண்டும்.

வைசூரி—மயிலிட்டிக் கோவிற்பற்றில் கட்டுவன்பகுதியில் இக்நோய்உற்பத்தியாய் இரண்டுமூன்றுபேர் இறந்தனர். அரசாட்சியாரும் விழிப்பாயிருக்கின்றனர்.

திருநெல்வேலி—கன்னாடிக்குழியில் பிறப்பு இறப்புடாப்டரவு வைத்தியராயிருந்துவேலைவிட்டிய டக்டர் எம். செல்லப்பாஅவர்கள் பிளைப்பாறுவதால அவரிடமாய் டக்டர் ஜோட்ஸ் எஸ். மேதரவர்கள் நியமனம்பெற்றுர்.

லண்டன் மற்றிக்குலேஷன் பரீட்சை— இப்பரீட்சை இனிமேல் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படுமாம்.

கள்ளுக்குத்தகை—விலைப்படாமல் இருந்த தவறணைகள் திங்கட்கிழமை கேள்விப் பத்திரமூலமாய் விலைப்பட்டன. சிவியாதெரு, சுண்டிக்குழி, கொய்யாத்தோட்டம், கரையூர், வண்ணார்பண்ணை தென்கிழக்கு, வண்ணார்பண்ணைவடகிழக்கு, கொக்குவில்மேற்கு, இமையாணன், தனக்காரக்குறிச்சி, தின்னுலைதெற்கு, புலோலிதெற்கு தவறணைகள் விலைப்படாமல் முன் நிறுத்தப்பட்டிருந்தன. எதிர்ப்போட்டியில் நீயோ நானென்று விலையேற்றி மாளாமல் கேள்விப்பத்திரமூலமாய் விற்பது நலமே!

யாழ்ப்பாண வைத்தியசாலை—இதில் செலவு[illegible]த் தம்பரிவாரத்தோடிருந்த வை[illegible] உற்பத்தியாயிருக்கிறது. இதற்காக இருகட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன.

சேர் ட்வைனம் நூதனசாலை— இச்சாலைக்காக 3000 ரூபா கையொப்பமூலமாய்ச் சேர்க்கப்பட்டிருந்தது. வித்தியாகர்த்தரும் அவ்வளவுதொகைகொடுக்க வாக்குப்பண்ணியிருக்கின்றனர். இன்னும் 4000 ரூபா தேவை. அதற்கு நம்தேசாதிபதியவர்கள் 5 ரூபா கொடுத்தார். மிகுதியும்விரைவிற்சேரும். மேற்படி துரையவர்களின் 91ம் ௵ பிறந்தநாட்கொண்டாட்டம் இம்மாசம் 22௳ நடக்குமாதலால் அதில் அவரது புத்திரியால் அக்கட்டிடத்துக்கு அத்திவாரக்கல் வைக்கப்படும்.

மரணசங்கதி—சென்ற 1௳ வெள்ளிக்கிழமை புத்தூரில் ஸ்ரீ க. சின்னத்தம்பியார் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை தமது 82ம் பிராயத்தில் தேகவியோகமானுர். இவ புத்தூர்வாசரும் கம்பத்திராயிமானிகளுமான ஸ்ரீ சி. சங்கரப்பிள்ளையவர்களுடையவும் காலஞ்சென்ற ஸ்ரீ சி. பொன்னம்பலம் அவர்களது மாதா. ஸ்ரீ கதிரித்தம்பி பூகத்தம்பியவர்களின தம ஸ்ரீ கா. சிறசிங்கஉடையார்புத்திரி கன்னிப்பிள்ளையவர்களதும் பேர்த்தியார். ஸ்ரீ ச. செல்லையா சேதுபதிக்கும் டக்றர் V. பொன்னையா அவர்களுக்கும் பேர்த்திமுறையானவர். இக்குணபூஷணியை இழந்த புத்திர பௌத்திரருக்கு மனவியசனமாயினும் தன்னாப்பிராயமானதால் மனவாறுதலடைவாராக.

இலங்கை.

எண்ணெய்யந்திரமும் கைத்தொழில்வங்கியும்—பம்பாய்ப் பாரியவர்த்தகர் மெஸ், D. D. டாடா கொழும்பில் எண்ணெய்யூறும் யந்திரசாலையும் கைத்தொழில்வங்கியும் வைத்துநடத்த முன்வந்திருக்கிறூர். யந்திரசாலைக்காக 85 லட்சம்ரூபா விட்டிருக்கிறார். கைத்தொழில்வங்கிக்கு 5 கோடி ரூபா விட்டிருக்கிறூர். இவர் தமபோது யப்பானுக்குப்போயிருக்கிறார். தூக்கத்திலிருக்க கொப்பருவும் இனித் தலைதூக்கும்போலும்!

நெற்குத்தும் யந்திரம்—அம்பாந்தோட்டையில் யந்திரம்வந்து சேர்ந்துவிட்டது. சித்திரைமாதம் வேலை ஆரம்பிக்கப்படும்.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உபபு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். துர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்களாவன:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமாயிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணுகி அசைக்க முடியாமற்போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால் [illegible] சுகமாய் இருக்கவேண்டுமானுல் மூத்திரப்பையை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

Doan's
Backache
Kidney
Pills Co.

ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா. .. . 10 8 0

இவை, சகல மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆர். டப்பிளியு. ஏச். மெல்லர் துரையவரிடத்திலுங் கிடைக்கும்.

ஊர்காவற்றுறை.

காலநிலை—வெயிலகோரம். சில இடங்களில்பொக்குளிப்பான் முதலியரோகங்கள் காணுகிறது.

கொலை—செகிந்தீவில் 3 ஆண்குழந்தையுள்ள 22 வயதுள்ள ஒருவனை ஆடுதிருடியதென்று ஒரு தாய்க்கிழவியும் மகளாகிய ஓர் குமர்ப்பெண்ணும் 3 ஆண்மக்களுஞ்சேர்ந்து அடித்ததினுல் அவன் இறந்துபோனுன். பொலிசுசிஜபதியும் முதலியாரும் டக்றரும் பொலிஸ் இன்ஸ்பெக்றரும் அங்கு சென்று அவர்களைக்கொண்டுவந்து யாழ்ப்பாணங் கொண்டுபோயினர்.

தட்டான் பூசைபட்டானும்—ஒருதட்டான் தட்டாமுட்டித்தனஞ்செய்து கல்லடம் படித்தானென்று கேள்வி. "கண்டுகொழுத்தால்லவோ மிலிராது" என்றபடி முத்தகருக்கு வயிறுரவுண்டால் வம்புக்குணமுண்டாய்விடுகிறதியல்பே! (கடி)

கோலச்சிலாங்கர்

வெர்ச்சீர் பொதுவாசகமம் மழையுமல்லறந்தன, பணப்புழக்கம் தங்கநாணயம் வெள்ளிநாணயம் காண்பதரிதாயின. உணவுப்பொருட்களோ மருந்துச்சமான்போல் வந்துகொண்டது. இந்நாக்கு எழுவட்டெருதங்களுக்குமுன் ஐந்நூறு அறுநூறுருக பக்கிஇன்றுவிற்றுவந்த றப்பற்பால் தற்போது நாற்பதிரண்டு வெள்ளியாய்விட்டது. காலபோகவியின் கோலமாய்மாறி வந்திருக்கும் இத்தேசத்தில் வந்திருக்கும் பிறதேச வாசிகளாகியநாங்கள் என்னசெய்யப்போகிருேமோ தெரியாது. ஆனதால் முதலாளித்தம் எங்கள் பாக்கியமன்று உள்ளதைக்கொண்டு உள்ளத்தெளிந்திருப்பதே உசிதம். நமதுதேசங்களாலவரும் கடிதங்களும் புதினப்பத்திரிகைகளுங் கப்பல்வரத்துக்குறைந்ததால மாசக்கணக்காகக் காலதாமசமாகின்றது. இன்றயர்ந்த "சன்மார்க்கபோதினி" "சத்தியவேதபாதுகாவலன்" என்னும் இரு பேப்ப

ர்களையும் பார்த்தலில் மேற்படி ரெயில்வேயில் சேவித்துவரும் மலையாளராகத் தமிழ்நாடுபோலிருக்கும் மெஸ். பி. ரே ஐயா மணியத்தைப் பற்றிச் சொல்லியிருப்பவைகளைப் பார்த்தால் ஒவ்வொருவரிலும் ஒவ்வொரு ராகத்தினைக் கின்றாரயிருக்கின்றது. மேற்படி மகானைப்பற்றிச்சொல்லிய வையாவும் முழுதும் மெய்யேயென்று தப்போலப் பிரசுரித்தவருக்கே நேராகவும் கேள்வியாலும் அறிந்திருக்கின்றேம். இவர்க்குமுன்னும் ஒருவர் மேற்படி நிலையிலிருந்து குணமலையோ குலமலையோவென்றும் [illegible] பேரைவருக்கு நீ தற்போது தம் தாய்நாடாகிய மலைகயில் வசித்துவருகிறார். இவ்விரு மனிதர் இருவரும் யாழ்ப்பாண டிஸ்திரிக்கில் புராதன உத்தியோக ஸ்தானத்தையும் முதலியாரென்றும் கம்பனிகளையுஞ்சேர்த்தவர்கள். ஆனபடியால் மலையகத்தாரும் பெயரை இரண்டுபெயராயில்லாமல் காரணப்பெயர் பெறத்தகுந்த மணிகளாய், அனந்தாட்சியையும் தேவநிலையையும் [illegible] தமிழிருக்கும் பிரஜைகளை ஓயாதின்றி நடுவுநிலைமைகுத்து என்றென்றைக்கும் குன்றுப்புகழைநாட்டி தம் முன்னேர்கட்டிருவொரு நடத்தி என்றும் குன்றுப்பெயரையும் குறையாச்செல்வத்தையும் இன்னுமின்னும் மேற்பதவியாகிய உத்தியோகஸ்தானங்களையும் வருத்தக்குணமுடையளாகப் பெயர்வினக்க எம்பெருமான் கிருபையை பிரார்த்து இச்சிறு பாவிகத்தை முடிக்கின்றேன்.

இங்ஙனம்
பழையபகடிதன் அ. செ. அ.

இந்தியா.

செயின் தோமஸ்ஆலாதசாலை—மைலாப்பூரிலுள்ள இச்சாலையை விருத்திசெய்வதற்காக அரசாட்சியார் 8237 ரூபா கொடுக்க உடன்பட்டனர்.

குரூப்பம் ராஜா—குரூப்பம் சமீந்தார் ஐரோப்பிய வீரபத்திரராசபகதூர் இறந்ததினால் தேசாதிபதி தமது துக்கசெய்தியைத் தெரிவித்தார்.

தொழிலாளர்கூட்டம்—பிரம்பூரிலுள்ள பக்கிங்காம்மில் கம்பனியும் கர்நாடக்மில் கம்பனியுஞ் சேர்ந்த தொழிலாளர் ஓர்சபைகூடி ஒற்றுமையுடன் தொழில்நடத்துவதே தேசசேமத்துக்குரியதெனத் தீர்மானித்தனர்.

தற்கொலை—திருவல்லிக்கேணியில் 28 வயதுள்ள தனபாக்கியம்மாள் ஓர்பாற்காரனின் வைப்பாட்டியாயிருந்தாள். அவன்சென்ற 3உ அவளுடன் பிணக்குற்று நான்றுகொண்டிறந்தான்.

இந்தியபத்திரிகைகள்—சுயராச்சியத்தை அவாவிஎழுதும் இந்தியபத்திரிகைகள் சில எல்லைகடந்து எழுதுவதால் அவைகள் பிணைகட்டவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் "இந்துவாசி" பத்திரிகைகளில் அச்சிடப்பட்டும் 13 வியாசங்கள் அரசுக்கு விரோதமாய் எழுதியிருக்கிறதாம். "நியூஇந்தியா" "காமன்வீல்" "டிரேட்அட்வைட்டைசர்" என்னும் பத்திரிகைகளும் பிணைகட்டும்படி கேட்கப்பட்டிருக்கின்றன.

[illegible]ண்டனை—சோமோரிர் கொள்ளைக்கூட்டத்தில் 51 பேர் எதிரிகள். அவருள் 29 பேர் விடுதலைபெற மீதியானோருக்கு இரண்டுவருடமுதல் மூன்றுமாசம்வரையில் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டது.

டெலிபோன்தடை—டெல்லியில் டெலிபோன் மாற்றும்ஆபீசில் 3உ தீப்பற்றியதால் செய்திப் போக்குவரவு தடைப்பட்டது.

மதவிரோதபிரசங்கம்—கோரானுக்கு விரோதமாக மௌ. லகுதீட்டன் என்னும் பிரசங்கியார் பிரசங்கித்ததினுல் நன்னடைப்பிணையில் விடப்பட்டார்.

கடிகாரத்திருட்டு—சென்னையில் சுந்தரம் என்பவன் முருகேசம்வன்பதியின் 65 ரூபாவிலுமதியான பொற்கடிகாரமொன்றைத்திருடி மூன்றுமாசக் கடுங்காவலையும் 65 ரூபா அபராதமும்விதிக்கப்பெற்றான்.

பணம் அபகரித்த உத்தியோகஸ்தர்—சென்னை மெசேசு, W. E. ஸ்மித்கம்பனியில் உத்தியோகஸ்தராயிருந்த வெங்கடாவும் பாலையம்நாயுடுவும் தப்புக்கணக்கெழுதிக் கம்பனிப்பணத்தை யபகரித்ததாய் இன்ஸ்பெக்டர் ஞானப்பிரகாசம்ஸினோவால் குற்றம்பாரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஓயசாலை—பெங்களூரில் நாகப்பாஎன்ற பால்காரனும் தாயம்மாளும் யச்சாதாயாயுஞ் சேர்ந்து 8 வயதுள்ள ஓர் மார்வாடிப் பெண்ணைக்கொன்று நகைகளை யபகரித்ததற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். தாயம்மாள் தன்குற்றத்திற்காக மன்னிப்புக்கேட்டு முடிபூறச்சாட்சியானாள்.

வேதாரணியக்ஷேத்திரம்—வரணி ஆனைத்தக்குரிய வேதாரணியக்ஷேத்திரத்தில் மகோற்சவம் நடைபெற்றபோது தேர் அச்சுமுறிந்து ஒருபக்கக்கால் உயரப்போய்விட்டது. பலர் காயமடைந்தனர். ஒருவன் உயிர்துறந்தான். சுப்பிரமணியசுவாமியையும் சந்திகேசுவரரையும் இழுபோட்டுவிட்டார்கள். புதுச்சப்பாடமேவல், நாகப்பசெட்டியார் 3000 ரூபா கொடுத்திருக்கிறார். ஆனால் அச்சு ஒருவிடமும் கிடைக்கவில்லையாம். இந்த ஸ்தலத்தைக்குறித்த தஞ்சையில் வழக்கு நடக்கிறது.

லைபேப்பூகம்பச்சேதம்—காங்காரிவில் மார்ச் 12உ நடந்த பூகம்பத்திஞல் கடைசிகளின் ரிஷிகளும் ஐரோப்பியரின்விடுகளும் நாசமாயின. 2000 பேர் மாண்டனர். அநேக ஐரோப்பியர் பயனிற்போய்ப் பதுங்கிக்கொண்டனர்.

ஓர்மாணவனின் தற்கொலை—ராயப்பேட்டையிலுள்ள ரத்தினமெனபவரின் குமாரன் தகப்பன் பள்ளிக்கூடச் சம்பளத்திற்காய்க்கொடுத்த பணத்தைக் கொடாமையால் பள்ளிக்கூடத்தால் நீக்கப்பட்டான். இதையறிந்து தந்தை [illegible] சிந்தத்திரிபேட்டை கோயிற் குளத்தில்விழுந்து தற்கொலைசெய்துகொண்டானும்.

பரிதாபவிபத்து—செனை ரேபல்லாவரத்தில் சீதாலபதனிலிருச்சாலையில்வேலைசெய்துகொண்டிருந்த 25 வயதுமைவயிதுள்ள மெக்கடக்கள்ளன் ரும்அமரிக்காய்மல் தோட்டங்கள் ஏற்றப்பட்டிருந்த பலகைப்பதன் அறுந்துவிழுந்து உடனே மரித்தாஞர். இந்தியாவில் அவருக்குச் சுற்றத்தவருமி ல்லையாம்! பரிதாபமே!

கட்டுக்காவலில் வைக்கப்பட்டவர்—மீரட்டில் மௌ. அசாதமோனி கல்கத்தாஅனாப்பரிவில் தம் மறியல்காவலப்பட்டிருந்தார். அவரைச் சில நிபந்தனையின்பேரில் வெளியேற்றவும் அரசாட்சி அதிகாரிகள் மேற்பார்வையில் பங்களாஒன்றில்வசிக்கவும் ஒழுங்குசெய்யப்பட்டும் அவர் தாம் நிரபராதியென்றும் தம்மை மறியலிட்டகாரணம் தமக்குத் தெரிவிக்கவில்லையென்றும் நிபந்தனையுடன் வெளியேறத் தாம் விரும்பவில்லையென்றும் [illegible]தெரிவித்துவிட்டார்.

கொர்த்திக்கொள்ளை—ஸராம்பூரில் சென்ற 8உ இரவு பஞ்சனன்பட்டாசாரிக்கு என்றும் வைத்தியர்வீட்டுச்சுவரில் ஓட்டைவைத்து இரண்டுடசனம் கொள்ளைக்காரர்புகுந்து வைத்தியரைத் தாக்கி 300 ரூபா பெறுமதியான ரொக்கம் நகைமுதலியவைகளைக் கொண்டுபோய்விட்டார்கள். கொள்ளையடி வெளிவந்தவுடன் கிராமவாசிகள் இவர்களையெதிர்த்துப் போராடியதில் 5 கிராமவாசிகள் காயப்பட்டார்கள். ஆனல் கொள்ளைக்காரர் தப்பியோடிவிட்டனர்.

ஒருகிராமம் தீயால் அழிந்தது—மோஸ்மீனுக்கு மூன்றுமைல்தூரத்துள்ள நியாக்பின்சிக் என்னுங்கிராமம் ஞாயிற்றுக்கிழமைபகல் தீயால்அழிந்துபோயிற்று.

பெரும்புயல்—முன் நடந்திராதவிதமாய் 12உ இரவு பம்பாயில் பெரும்புயல் அடித்தது. வண்டிப் போக்குவரவுகளெல்லாம் நின்றுபோயின. துறைமுகத்திலிருந்த சிலதோணிகள் அடித்துக்கொண்டுபோகப்பட்டன. சில மூழ்கின.

யுத்த தந்தி.

Summarised
From the Madras "Hindu Nesan"

பிரான்சு பெல்ஜிய யுத்தம்.

வார்னிட்டனில் பிரித்தானியதாக்கல்.

5உ சேற்றிரவில வார்னிடல் தாக்கலைத்தடுக்க எதிரிகள் பலத்தமுயற்சிசெய்தார்கள். 40 சத்துருக்கள் இறந்தார்கள். இரண்டாம்படைவரிசையை யோட்டிக்கத்துருக்கள்செய்த தாக்கலையுந் தடுத்தோம். நம்மவருள் நால்வர் காணப்படவில்லை. புலக்கோட்டுக்குக்கிழக்கிலும் ஸ்கார்ப்புக்குவடக்கிலும் தாக்கிலென்சுத்ருக்கும் பிரவேசித்துச்சிலரைக் கைதிகளாயுமபிடித்தோம். நமதுசேதம் அதிகமல்லவென்று பிரான்சியசெய்தி கூறுகிறது.

7உ சத்துரு விமானக்கூட்டங்கள் நமதுவிமானங்களவிட்டகுண்டுகளால சேதமாயின. செர்மனியர் தம்பெரும்படையை முடிகொண்டுவந்து தாக்கியும் பெல்ஜியர் பதுங்கிச்சென்று சத்துருக்களை ஒடும்படிசெய்தனர். 84 செர்மனியரை[illegible]ம் 8 யந்திரப்பீரங்கிகளையும் வேறு யுத்ததளபா[illegible]களையும் பெல்ஜியர் கைப்பற்றினரென்று ப[illegible]த்தானிய தலைமைஸ்தானத்திலுள்ள [illegible] தெரிவிக்கிறது.

11உ அமரிக்க யுத்த[illegible]திரியாரான பெ[illegible]கர் தம்பரிவாரங்களுடன் பிரான்சுக்கு வந்திருக்கிறார்.

9உ சேற்றுமாலை சத்துருக்கள் மெனின்தெருவுக்குத்தெற்கிலிருந்து ஒருமைல்துரத்தில் மிகுதி விஷமாய வெடிப்பிரயோகஞ்செய்து ஷெசிர்மானமாயிருந்தனர். ஆயினும் போல்டர்கூக்கு மூவின்ற பற்றிடங்களிலெல்லாம் எதிரிகளை தடுத்துப்பிடித்துவிட்டோம்.

மெனின்முதலியஇடங்களில் நமதுவிமானிகள் 400 குண்டுகளைஎறிந்துப்பிரயோகித்து 13 சத்துருவிமானங்களைக் கீழேகொண்டுவந்து வேறுவிமானங்களை அண்டவிடாதோட்டினர். 24 பகிய குண்டுகளையும் 48சந்தியகுண்டுகளையும்பிரதேசு யபுகைரதஸ்டேஷனில்கச்சேதமுண்டாக்கினோம். ரெயின்குவன்னுக்கு உடமேற்காகியஇடங்களில் கமமானதாகசனால் பல சத்துருக்கள்மாண்டனரென்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

ஒற்றாகிருபர்சொரிப்பதில், கேந்றுசுடர்த்தன்பை இவ்வருடமுன்குநடந்தசண்டைகளிற் பெரிது. விஷத்தனதெகையும் தாராளமாய்ப்பாவித்தனர். எதிரிகளை உட்புகவிடாமல் தடுத்தோடு, காவலில்நமதுவரிசை நம்மைக்கெட்டியது. மெனின்தெருவிற்கருகில் பகற்பொழுதுமுழுதும் பீரங்கிக்குண்டுகளின்தாக்கு மிக அதிகம். காலாட்படையின் ஒருபகுதியார் முன்சென்றது. அட்டைக்கருகிலுள்ள சண்டை பலமாயேற்பட்டது. அத்தருணம் மஞ்சளமஞ்சில அதிகரித்திருந்தது. வெருகுழுப்பமாயிருந்தும் எதிரிகள் இடத்தில்லைகளை ஸ்தாபித்துக்கொண்டார். அக்கிலேகளேக்கி இராமுழுதும் வெட்டியெடுத்துக்கொண்டிருந்தோம் எனறு பிரித்தானிய செய்தி கூறுகிறது.

10உ பிரான்ஸ்டையில் மின்சாரவிசைக்கம்பிவேலிகள் போடபடிருக்குமிடத்திற்குமுன்பாக 20 மீற்றர்தூரத்தில் செர்மனியர் தனமிறங்கி பெருமைக்கடற்கரைவரையில் தமிலையை விஸ்தரி[illegible] அப்பாகுளிவாசிகள் யாவரையும் காவல்செய்யும்படி தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். உலகெங்கும் பெல்ஜியத்தை அப்புறப்படுத்திவிடச் செர்மனிருக்குஎண்ணம்போலும் தோற்றுகிறதென்று பெல்ஜியன்பத்திரிகை கூறுகிறது.

இருப்புப்பாதையிலும் விமானக்கூட்டங்களிலும் 600 வெடிகளைவீசினும், பதுக்சத்துருவிமானங்களவிழ்த்தி வேறுபலவற்றைச்சேதப்படுத்திவிட்டோம். நமது விமானங்களில் இரண்டு காணவில்லை. ஒரு தொடரில் நிப்பற்றச்செய்தோம். [illegible] நமது விமானமொன்று திரும்பவரவில்லையென்று செர்டனிலே தெரிவித்தார்.

10உ முனைகுழுவெடிகளைத் திடீரென்சாத்தி அப்பின்பு ஆர்மெனடசுகுருக்கழுக்கல் சத்துருக்கள் நமதுநிலைகளைத் தாக்கியமையுறும் [illegible] பிரித்தானியர் காணப்படவில்லையென்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

பரிஸில் சத்துருவிமானம்.

8உ பரிஸ்நகரில் பத்துப்பன்னிரண்டு சத்துருவிமானப்படைகள்சேர்ந்து வேலை செய்தன. விமானபங்கப்பீரங்கிகள் ஒருபக்கத்தில் வெடிதீர மறுபக்கத்தில் 60 பிரான்சிய விமானங்கள் சத்துருவிமானங்களைத் துரத்தத்துரத்த ஆரம்பித்தன. 11 பேர்இறந்து 41 பேர் காயப்பட்டனர். காம்பெயினில் சத்துருவிமானமொன்று தரைவந்துசேர அதிலிருந்தான்குபேரும் காவலில்வைக்கப்பட்டனர்.

12உ ஆஸ்திரேலியபடையார் எதிரிகளின் நிலையிற்சண்டைவைத்துப் பலரைக்கொன்றும் பலரைக் கைதிகளாயும்பிடித்துவந்தனர். நமதுசேதம்அதிகமல்ல.

சீச்கோட்டுக்குத்தெற்கே அமரிக்க படையார் சத்துருக்களின் 6 விமானங்களைக் கீழேகொண்டுவந்தும் வேறொன்றைச் சேதப்படுத்தியும்விட்டார்கள்.

சனிக்கிழமை லோரனில்நடந்த இரண்டுதாக்கலில் அமரிக்கர்கலந்து செர்மனியரின்ஸ்தலத்துள் 500 யார் கடந்துசென்று அவர்கள்தங்குமிடங்களைத் தகர்த்துத்திரும்பினர். அவருள் காயப்பட்டவர் நால்வருக்கதிகமில்லை. இரண்டாவதாய் சியுவிச்சவுக்குக்கிழக்கில் ஓர் அமரிக்ககொம்பனியும் இரண்டு பிரான்சிய கம்பனிகளுஞ்சேர்ந்து மூன்று மறைகுழிமணிவிலிருந்த எதிரிகளைத் துரத்தி யனைவரைச்சிறைபிடித்துவிட்டனர்.

அமரிக்க யுத்தமந்திரியான மெஸ. பேகர் 11உ பரிஸ்நகரம்போய்ச்சேர்ந்தார்.

திங்கட்கிழமைஇரவில் பரிஸ்நகரின்மேல் 7 சத்துருவிமானப் படைகள்தோன்றிப் பலஇடங்களில் வெடிக்குண்டுகளைவீசினர். உயிர்ச்சேதமும் பொருட்சேதமுமுண்டு.

13உ திங்கட்கிழமை நம் கடல்விமானங்கள் புருசஸ் கப்பற்கட்டுந்துறையில் 3 டன்வெடிக்குண்டுகளைவீசின. வெடிவிபத்து சேர்ந்த 2 சத்துருவிமானங்கள் தீப்பற்றிக் கீழேவிழச்செய்தோம். நமதுவிமானங்களில் ஒன்றைக்காணவில்லை.

12உ இரவு 9 மணியில் சத்துரு விமானங்கள் பரிஸ்நகர்மேல் தோன்றியிருப்பதாய்த் தெரிவிக்கப்பட்டது. 60 விமானங்கள் பிரான்சிய படைவரிசையைத் தாண்டிவந்தன. அதைத்தாண்ட எதிரிகள்மிகு கஷ்டப்பட்டுப்போயினர். என்றாலும்சிலவிமானங்கள் உட்புகுந்துபரிசிலும் சுற்றுப்புறங்களிலும் வெடிகளை வீசின. அனேக கட்டிடங்களில் தீவிபத்துண்டாயின.

ருசியா.

சமாதானஉடன்படிக்கை.

3உ சமாதான உடன்படிக்கை ஆலோசனைசற்றும் பிரயோசனப்படவில்லை. இன்னும் இருக்க இருக்க எல்லாம் மாறுபாடாய்முடியுமென்று நம்பவேண்டியிருக்கிறது. சமாதானஉடன்படிக்கையில் கையொப்பமிடும்வரையில் போரைநிறுத்தச் செர்மனியர் உடன்படாமையால் நாம் ஆலோசிக்காமலே கையொப்பமிடத் தீர்மானித்தோம். புதிய நிபந்தனைகளில கார்டாசான் கார்ஸ்பாடம் ஆகிய குதிரை ருசியாவிலிருந்து பிரிந்துவிடவேண்டுமென்பது கவலைக்கிடமாயிருக்கிறதென்று ருசிய சமாதான பிரதிநிதிகள் பீற்றோகிராதுக்குத் தெரிவித்துவிட்டுக் கையொப்பமிட்டனர். அதனுல் பெரியருசியாவில் யுத்தம் நிறுத்தப்பட்டது.

சைபீரியாவில் போல்ஷிவிக்குகள்.

மூன்றுகோடி ரூபிள்பெறுமான போர்த்தளவாடங்களை விளாடிவஸ்டாக்துறையில்போல்ஷிவிக்குகள் கைப்பற்றினராம். ஐக்கியஅரசுகளின்கப்பற்படையார் தம்சேனைகளைக் கரைக்கிறக்கமுயற்சிக்கின்றனர்.

செர்மனியும் சைபீரியாவும்.

செர்மனி சைபீரியாவிற் சண்டைசெய்யாதென்றும் யப்பான் படையெழுச்சியால் ருசியர் உதவிவேண்டுமெனக்கேட்டால் அதற்குரிய விதிகளையுண்டாக்கியபின் ருசியாவுக்குஉதவிசெய்யுமென்றும் செர்மனியில் பறைசாற்றப்படுகிறதாம்.

ஐக்கிய ஸ்தானாபதிகளின் புறப்பாடு.

ஐக்கியதேச ஸ்தானாபதிகள் புறப்படுமுன் அவர்களிடமிருந்த காகிதங்களெல்லாம் பரீட்சிக்கப்பட்டன. ஸ்தானாபதிகளுடன்செல்ல அவர்களுத்தியோகஸ்தர்விடப்படவில்லை. இடங்காணுமென்று சொன்னுர்கள். இத்தாலிய ஸ்தானாபதி தம்முடன்சேர்ந்த உத்தியோகஸ்தரல்லாதாரையுஞ் சேர்த்தனுப்ப எத்தனித்தாரென்று அவரைச் செல்லவிடப்படவில்லை. பிரித்தானிய ஸ்தானாபதியும் அவரைச்சேர்ந்தோரும் ஹெல்சிங்போவைச் சேர்ந்தார்கள்.

உக்கிரேனியரின் ஆட்சேபம்.

5உ சோவியட் பிரதிநிதிகளையும் அழைத்து அவர்களுடன் சமாதானவிஷயமாய்ச் செர்மனியர் பேசவில்லையென்று உக்கிரேனியர் ஆட்சேபித்துத் தமைத் தாம் பாதுகாத்துக்கொள்ளவும் பின்செல்கையில் எதிர்ப்படுவன எல்லாவற்றையும் அழித்துவிடவுங் கருதியிருக்கிறார்களாம்.

சைபீரியாவிற்கடுஞ்சண்டை.

5உ டிரான்ஸ் சைபீரிய புகைரதவீதியிலுள்ள டெலிரியாயில் ருசிய குதிரைப்படையாளரின் தலைவனுன சாமெனோப்புக்கும் போல்ஷிவிக்குகளுக்கும் கடுஞ்சண்டைநேர்ந்தது. போல்ஷிவிக்குகள் தொகையிற் குறைந்தும் நல்ல யுத்தாயுதங்களைஉடையிருந்ததினுல் மெகாசாத்தலேவனுன சாமனேப் பின்வாங்கநேரிட்டது.

சைபீரியாவிலுள்ள ஐக்கியராச்சியத்தாரின் காரியங்களைப் பாதுகாப்பதற்காக யப்பான் பிரவேசித்து நடபடி நடத்தவேண்டுமென்று டோகியோவிலுள்ள பிரித்தானிய பிரான்சிய ஸ்தானாபதிகள் தெரிவிக்க ஆலோசித்திருக்கிறார்கள். அதருள் அமரிக்க ஸ்தானாபதி இதற் சேருவாரென்று எதிர்பார்க்கவில்லை.

யப்பான் தனியாய் சைபீரியாவில் வேலைசெய்ய ஐக்கியஅரசுகள் சம்மதித்திருக்கின்றனவாம். அமரிக்காவும் சீனுவும் கலந்துகொள்ளுமாம்.

6உ யப்பான் சைபீரியாவிலநடபடிநடத்த அமரிக்காவும் உடன்படுமாம். சீனுவும் யப்பானுேடு சேர்ந்துகொள்ளுமாம்.

ருசியர் பாலங்களை அழிக்கின்றனர்.

லோக்கைபகால் வரிக்கும் ஹைலஸ்லைக்கும் மத்தியிலுள்ள டிரான்ச சைபீரியன் றெயில்வேபாலங்களை ருசியர் அழிக்கிறார்களாம்.

பீற்றோகிராதில்பஞ்சம்.

பீற்றோக்கிராதிலுள்ள பிரித்தானியகாரியங்களை ஒல்லாந்தர்பார்ப்பர். பின்லந்துக் கரைவழி மூட்டப்பட்டதினுல் பீட்டர்சாவோடிக்கில் 1500 பிறதேசஅடைக்கலத்தார் [அவருள் மிகுதியானோர் அங்கிலேயர்] சேர்ந்திருக்கின்றனர். பீற்றோக்கிராதில் ஆகாரக்குறைவேற்பட்டிருக்கிறது. சாப்புகளில் பல மூட்டப்பட்டன.

யப்பான்.

யப்பானுக்கு நெருங்கிய ஆபத்துநேரிட்டாலோழிருந்தாலன்றி யப்பான்சைபீரியாவில் பிரவேசிக்கக்கூடாதென்று யப்பானிய பார்லிமென்டில் பெரும்பான்மையோர் என்னுகிறர்கள். ருசியாவிடம் யப்பான் விரோதம்பாராட்டுவதை யப்பானிய சனம்விரும்பவில்லை. ஆனுல் செர்மனியின் சூழ்ச்சிகளைத் தடுப்பது அவசியமென்று எல்லோரும்அபிப்பிராயப்படுகிறாகள்.

சமாதானஉடன்படிக்கை.

ருசியர் தற்போதிருக்குந்நிலைமையில் எவ்வித ஏற்பாட்டையும் ஒப்புக்கொள்ளவேண்டியதாய்த்தானிருக்கும். விஸ்தாரமான தேசங்களை ருசியர் செர்மனிக்குக் கொடுத்துவிடும்படி நிபந்தனை ஏற்பட்டிருக்கிறது. உக்கிரேனியருடன் ஏற்பட்ட ஒப்பந்தம் ருசியரே தீர்த்துக்கொள்ளும்படி விடப்பட்டது. பின்லந்துக்குச் செர்மனி நடையின்றி உதவியையனுப்பிவருகின்றனர். லெஸ்தோனியாவைப் பிடித்தும் அதைசுவதந்தரமாய் உபயோகிப்பதில்லையென்று சாட்டுச்சொல்லுகிறார்கள். பாத்தினியா குடாவையும் சுவாதீனப்படுத்திக்கொண்டார்கள்.

ருசியகூட்டுறவை யப்பான்நாடுகிறது.

10உ சைபீரியாவில் போல்ஷிவிக்குகளுக்கு எதிரிகளாயுள்ளவர் உதவிபுரியவேண்டுமென்றும் அபிப்பிராயத்துடன் யப்பான் அவர்களுடன் சமரசப்போக்குவரவு நடத்துகிறதாம். தமுடன்கூடி வேலைசெய்வதற்குத் தருத்திருசியப்படையொன்றைச்சேர்க்க யப்பான் முயற்சிக்கிறதாம்.

செபினுபின் சேனைகள் முகத்தரமாயிருக்கிறதென்றுதெரிகிறது. போல்ஷிவிக்குகளோ தமக்குள் பிரிவினைப்பட்டிருக்கிறார்கள். சீட்டவில் கோசாக்கியருட்பட மற்றோரும் நமக்குச்சம்பந்ம்போதாதென்று திருத்தமினப்பட்டிருக்கிறார்கள். போல்ஷிவிக்குப்-பிரங்கிப்படைகளிடம் பெரியபீரங்கிகளிருக்கின்றன. அவைசெர்மனியரால் நடத்தப்படுகின்றன.

பின்லந்திலுள்ள அபுவுக்கருகில் 2000 செர்மனியசேனைகள் பீரங்கிப்படையுடன் இறங்கியிருக்கின்றனராம்.

பின்லந்திலும் ஏலண்டுதீவுகளிலும் செர்மனிய துருப்புகளை இறக்குவதைக்குறித்து ருசியப்பிரதேசகாரியமந்திரியாரான மாஸ்யெர்டெகிரின் ஆட்சேபித்திருக்கிறார்.

12உ பின்லந்தைத்தவிர ருசியாவுக்கும் ருமேனியாவுக்குமுள்ள மொனிடர்களும் தபால்களும் நிறுத்தப்பட்டன.

ஸ்தலமாற்றம்.

10உ பிரின்சஸ்தப்பெண்ணும் ருசிய பழையமந்திரியர் பீகிங்கைத் தலைமைஸ்தானமாக்கிக்கொண்டு ருசிய நிர்வாகம் வகித்திருப்பதுடன் யப்பானியரின் கூட்டுறவையும்நாடி அச்சேனைகள் கரைவந்துசேர்வதை எதிர்பார்த்திருக்கிறார்.

நிர்வாக உத்தியோகஸ்தரைவரும் பீற்றோக்கிராதிலிருந்து சனிக்கிழமை மாஸ்கோநகரைப் போய்ச் சேர்ந்திருக்கின்றனர். சோவியட் பத்திரிகைகளான ஸ்வீரா பிராவட் ஆகிய இரண்டும் தம் தலைமைஸ்தானத்தைப் பீற்றோக்கிராதிலிருந்து மாஸ்கோவுக்கு மாற்றிக்கொண்டன.

ருசியாவைத் தனக்குக் கப்பங்கட்டும்படி செர்மனிசெய்யும் முயற்சியைத் தடுப்பதே இம்மாற்றத்தின் நோக்கமாம்.

12உ மரண்சியர் டிராட்ஸ்கி பீற்றோக்கிராதில்தானிருப்பார். மாஸ்கோக் காங்கிரசில் கலந்துகொள்ளமாட்டார்.

ஸ்லேவனியர் செர்மனியரின் இறுதிக்கடிதத்தின்மீனும் கவலைகொண்டிருப்பவர்களை விடவில்லை.

செங்காவலர் சனசமூகஆட்சியை விரும்புவாரைக் கொன்றுவிடுகின்றனராம்.

ருசியாவும் செர்மனியுஞ்செய்த வியாபாரஉடன்படிக்கையில் பால்டிக்சமுத்திரத்திலிருந்து கருங்கடல்வரையில் ஒரு பெரியகால்வாயிருக்கவேண்டியதற்கான பிரணமும் சேர்க்கப்பட்டிருக்கிறதாம். அதை நிறைவேற்றச் செர்மனிய தனவந்தர் முதல்விட முன்வந்திருக்கிறார்களாம்.

பிரித்தானியா.

கப்பல்நட்டம்.

லார்ட் இஞ்சுகேப் தெரிவித்ததாவது;—நமது கப்பல்கள் எவ்வளவு அமிழ்த்தப்படுகின்றன என்பதைச் சனங்கள் அறியவில்லை. சண்டை ஆரம்பமானநான்முதல் எவ்வளவு கப்பல்கள் சத்துருக்களால் நாசமாக்கப்பட்டனவோ அவ்வளவுகப்பல் கூடப் புதிதாய்ச்செய்யப்படவில்லை.

விமானத்தாக்கல்.

8உ விடாழக்கிழமை இரவு 11 மணிவரையில் இங்கிலந்தின் கீழ்க்கரையில் சத்துரு விமானங்கள்தோன்றி லண்டனை நோக்கிச்சென்று வெடிகளைவீசின.

சேற்றிரவில் எதிரிகள் தாக்கியபோது லண்டனில் அராரோக்பிரிவாலின் என்னும் ஓர்வகைச் சோதெரிந்தது. ஆதலால் சத்துருக்கள் நடவின் எல்லையையறிந்துகொண்டார்ப்போல் விளங்குகிறது. பலகுண்டுகள் சனங்களின் வாசஸ்தானங்களில் விழுந்தன. ஐந்துவீடுகள் அழிந்தனவியும் ஒரு தாதிமாருள்ள மகிச்சாலையும் அழிந்தது. அழிந்ததோடு ஒரு மெத்தைக்குப்போகமுடியவாதல் காவலாளியும் [illegible] ன் பேர்க்கப்பட்ட இருதயங்களைப் பலகையாய் வைத்து அவைகளுக்குக்கீழாய்ப் புரண்டுசென்றுர்கள். அதனுல் காயப்படாது தப்பினர். வெடிவிபத்தால்விழுந்த சுவரின்கீழும் கூரையின்கீழும் அனேகர் உயிருடன்தவித்துக்கொண்டிருந்து பின்பு வெளியேற்றப்பட்டனர். வேறோரிடத்தில் ஒருவன் நான்காம்மெத்தையிலிருந்து கீழேவிழ்ந்தும் கம்பனியாத போர்த்துருக்கத்தினுற்போலுக் த

ப்பிவிட்டான்.

மேல்மெத்தையிலிருந்த ஸ்திரீயொருத்தி வெடிச்சத்தத்தைக்கேட்டுக் கீழிறங்குகையில் மேல்மெத்தையிடிந்தும் அவள் ஓர் மொட்டைச்சுவரில் அந்தரமாய் இரண்டுமணிநேரம் தொங்கிக்கொண்டிருக்கநேர்ந்தது. தீயவிப்போர்வந்து அவளை மீட்டனர்.

இவ்விமானத்தாக்கலால் 46 பேர் காயப்பட்டும் 11 பேர் கொல்லப்பட்டும் போனார்களென்று சொல்லப்படுகிறது. வீழ்ந்தவீடுகளின்கீழ் 6 பேர் புதையுண்டனரென்று அனுமானிக்கப்படுகிறது. தாக்கியவிமானங்கள் எழெட்டிருக்குமாம். பொருட்சேதமுமுண்டு.

பின்வந்தசெய்திப்படி 9 ஆடவரும் 8 ஸ்திரீகளும் 3 குழந்தைகளும் கொலைப்பட்டும் 45 பேர் காயப்பட்டும் போயினர். ஒருவருடைய பிரேதமாத்திரம் அகப்படவில்லையெனத் தெரிகிறது.

